## காரமடை நகராட்சி

2022 ம் ஆண்டு மே மாதம் 20ம் நாள் வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம், காரமடை நகரமன்ற கூடத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர் அவர்கள்**

V Ushavenkatesh
நகரமன்றத் தலைவர்
காரமடை நகரமன்றம்

---

**பொருள் : 1**

காரமடை நகராட்சி ஆணையாளரது ஏப்ரல்-2022 மாதத்தின் நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :-** பதிவு செய்யலாம்.

**பொருள் : 2**

நகர்மன்ற கூடத்தில் தலைவர், துணைத்தலைவர் மற்றும் ஆணையாளர் அமருவதற்கு மரத்தினாலான இருக்கைகள் வாங்கியது மற்றும் திடீரென பெய்த கனமழையினால் நகராட்சி வார்டு பகுதிகளில் மரம் குடியிருப்பு பகுதிகள் மற்றும் சாலைகளில் விழுந்ததை அகற்றியது போன்ற பணிகளை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் கீழ்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது நகரமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | செலவின விபரம் | செலவினத் தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | நகர்மன்ற கூடத்தில் தலைவர், துணைத்தலைவர் மற்றும் ஆணையாளர் அமருவதற்கு மரத்தினாலான இருக்கைகள் வாங்கியது. | 86,730/- |
| 2 | திடீரென பெய்த கனமழையினால் நகராட்சி வார்டு பகுதிகளில் மரம் குடியிருப்பு பகுதிகள் மற்றும் சாலைகளில் விழுந்ததை அகற்றியது. | 30,000/- |

**அ.கு :-** அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் : 3</u>

காரமடை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனங்கள் 23.03.2022ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டதில் அதிக தொகைக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களுக்கு ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | 2021-2022ம் ஆண்டு ஏலத் தொகை (ரூ) | மூன்றாண்டு சராசரி (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.08 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு – மாத வாடகை அடிப்படையில்) | 25200 | 25200 | மாத வாடகை ரூ.2300/- வீதம் வருட வாடகை ரூ.27,600/- ஒப்பந்தப்புள்ளி (4ஆம் அழைப்பு) | திரு.எ.சரவணன் | சென்ற வருட ஏலத்தொகையி லிருந்து ரூ.2300/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம். |
| 2 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.13 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு – மாத வாடகை அடிப்படையில்) | 49680 | 49680 | மாத வாடகை ரூ.4250/- வீதம் வருட வாடகை ரூ.51,000/- ஒப்பந்தப்புள்ளி (5ஆம் அழைப்பு) | திருமதி.லட்சுமி பிரியா | சென்ற வருட ஏலத்தொகையி லிருந்து ரூ.1320/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம். |

<u>அ.கு :-</u> மேற்கண்ட ஏல இனம் 4 அழைப்பு கோரப்பட்டதில் 3 அழைப்புகளில் ஏலம் கோர எவரும் வரவில்லை. 4ம் அழைப்பில் 1 கடையும், 5ம் அழைப்பில் 1 கடையும் அதிகபட்சமாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் கலம் 7ல் குறிப்பிட்டுள்ளபடி ஏல இனம் ஊர்ஜிதம் செய்ய அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் : 4</u>

காரமடை நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டிற்கு செஞ்சிலுவை சங்கத்திற்கு செலுத்த வேண்டிய சந்தா தொகை ரூ.2500/-யை கோயம்புத்தூர், இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு செலுத்த நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சந்தா செலுத்தியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு :-</u> இந்திய செஞ்சிலவை சங்கத்திற்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான சந்தா தொகை ரூ.2500/- செலுத்த அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் : 5</u>

காரமடை நகராட்சியில் நகரர்மன்றத் தலைவருக்கு அலுவலகப் பணிகளை கவனிப்பதற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்கு உட்பட்டு சாதாரண மாடல் (Basic Model) வாகனம் ரூ.9.00 இலட்சத்தில் வாங்குவதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.09, நாள்.21.03.2022ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.11135/2022/எம்3, நாள்.06.05.2022ன்படி ஒரு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் ரூ.16.82/-இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு

மிகாமல் விதிகளுக்கு உட்பட்டு வாங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கூடுதலாக ஆகும் செலவுத் தொகை ரூ.7.82/–இலட்சத்திற்கும் மற்றும் புதிய வாகன காப்பீடு மற்றும் பதிவுச்சான்றுகள் பெறுவதற்கு ஆகும் செலவினம் மொத்தம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**ஆ.கு :-** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.11135/2022/எம்3, நாள்.06.05.2022ன்படி ஒரு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் ரூ.16,82,000/-மதிப்பீட்டில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்கு உட்பட்டு வாங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் புதிய வாகன காப்பீடு மற்றும் பதிவுச்சான்றுகள் பெறுவதற்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.20.00 இலட்த்திற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் : 6**

1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 81 A, அரசாணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி-4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையில் காரமடை நகராட்சியின் நகர்மன்றத் தீர்மான எண்.29, நாள்.11.04.2022-ன்படி 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு மற்றும் புதிய வரி விதிக்கவும், கீழ்கண்டவாறு சொத்துவரி மற்றும் காலிமனைவரி உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயித்தல் தொடர்பான அட்டவணை -I**

1. சொத்துவரி

| பரப்பளவு சதுர அடி | உயர்வு செய்வதற்கான காரணி | A | | B | | C | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பழைய மண்டல மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்கண்டவாறு | பழைய மண்டல மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்கண்டவாறு | பழைய மண்டல மதிப்பு (ரூ) | புதிய மண்டல மதிப்பு கீழ்கண்டவாறு |
| குடியிருப்பு | | | | | | | |
| 600 சதுர அடி வரை | 1.25 | | 1.00 | | 0.75 | | 0.63 |
| 601 - 1200 | 1.50 | | 1.20 | | 0.90 | | 0.75 |
| 1201 - 1800 | 1.75 | | 1.40 | | 1.05 | | 0.88 |
| 1801க்கு மேல் | 2.00 | 0.80 | 1.60 | 0.60 | 1.20 | 0.50 | 1.00 |
| குடியிருப்பு அல்லாதவை | | | | | | | |
| கல்வி நிறுவனங்கள் | 1.75 | | 1.40 | | 1.05 | | 0.88 |
| தொழிற்சாலை | 1.75 | | 1.40 | | 1.05 | | 0.88 |
| வணிகம் | 2.00 | | 1.60 | | 1.20 | | 1.00 |

2. தற்போதைய வரிவிதிப்பு ஆண்டு மதிப்பில் 10 சதவீதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

3. காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போது உள்ள அடிப்படை மதிப்பு 100 சதவிதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு மற்றும் புதிய வரி விதிக்கப்படும்.

4.மேற்கூறிய உயர்வின் அடிப்படையில் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து, இனிவருங்காலங்களில் சொத்துவரி மற்றும் காலிமனை வரி நிர்ணயம் செய்யப்படும்.

5. திருத்தியமைக்கப்பட்டுள்ள வார்டு மறுவரையறையின்படி, புதிய வார்டுகள் வாரியாக மண்டலங்கள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம் | வார்டு மறுவரையறையின்படி தற்போது நிர்ணயம் செய்யப்படும் தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | A | 158 |
| 2 | B | 50 |
| 3 | C | 38 |

அரசாணைப்படி, சொத்துவரி பொது சீராய்வு மற்றும் புதிய வரி விதிப்பின்படி, சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு தொடர்பான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் இவ்வறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் 30 தினங்களுக்குள் எழுத்துபூர்வமாக நேரிலோ, தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் (commr.karamadai@tn.gov.in) மூலமாகவோ இந்நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு பொது மக்கள் அறியும் வகையில் இந்நகராட்சி மூலம் சொத்துவரி மற்றும் காலியிட வரி பொது சீராய்வு அறிவிக்கை ந.க.எண்.897/2022/அ2, நாள்.11.04.2022-ன்படி இரண்டு தமிழ் நாளிதழ்கள் (தினந்தந்தி மற்றும் மாலை மலர்) மற்றும் ஒரு ஆங்கில நாளிதழ் (Trinity Mirror) ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது.

சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு தொடர்பாக 63 ஆட்சேபனைகள் பெறப்பட்டுள்ளது. அனைத்து ஆட்சேபனைகளும் தற்போதைய நிலையில் தாங்கள் எதிர்பார்க்கும் வரி உயர்வை செலுத்த இயலாது எனவும், சொத்துவரி உயர்த்தி 10 ஆண்டுகள் ஆகிறது என்றபோதும் எங்களது வரியினை உயர்த்தக்கூடாது என கேட்டுக்கொண்டுள்ளனர்.

அரசாணைப்படி அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் சொத்துவரி உயர்வு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 2008-2009 ஆம் ஆண்டில் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டு கடந்த 15 ஆண்டுகளாக சொத்துவரி உயர்வு செய்யப்படவில்லை. மேலும் ஒரு பகுதிக்கு மட்டும் சொத்துவரி உயர்வு செய்வதிலிருந்து விலக்கு அளிக்க வழிவகை இல்லை என்பதால் மேற்படி ஆட்சேபனை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலாது.

எனவே சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்ய மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u>

1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 81 A, அரசாணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி-4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையில் காரமடை நகராட்சியின் நகர்மன்றத் தீர்மான எண்.29, நாள்.11.04.2022-ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபடி 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு மற்றும் புதிய வரி விதிப்பு உயர்வு செய்வதனை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு 01.04.2022 முதல் உயர்வு செய்ய அனுமதிக்கலாம்.

V Usharavikatul

நகரமன்றத் தலைவர்
காரமடை நகரமன்றம்

**20.05.2022 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

**பொருள் எண்.01**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.02**

வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள வார்டு எண்.3, 7, 9 மற்றும் 10ல் மரங்களை கொண்டு வந்து ஏலம்விட்டு அதன் தொகையினை நகராட்சி கணக்கில் கொண்டு வருவது என தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.03**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.04**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.05**

ஒத்திவைக்கப்பட்டது.

**பொருள் எண்.06**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்

**//உண்மை நகல் //**

V Ushavenkatesh
தலைவர்,
காரமடை நகர்மன்றம்